# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

# 2006–07

## உள்ளாட்சி அமைப்புகள்

**1.** உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் 2006–2007 ஆம் ஆண்டு குறித்த காலத்திற்குள் நடத்தப்படும்.

**2.** உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு **சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு,** தேர்தல் நடத்தப்படும்.

**3.** உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், அவைகளைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும்.

**4.** உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட இந்த அரசு ஒரு நிபுணர் குழு அமைக்க முடிவு எடுத்துள்ளது.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**5.** நடப்பு ஆண்டு முதல் தமிழ் நாட்டிலுள்ள ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு புதிய திட்டமான **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்** நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளும் வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.2,500 கோடி அளவிற்கு மாநில அரசின் நேரடி நிதியுதவி பெறும். இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநிலத் திட்டங்களில் இந்தப் புதியத் திட்டமே மிகப் பெரிய திட்டமாகும்.

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

6. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 1998ஆம் ஆண்டு முதல் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக 12,000/– ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை, முந்தைய அரசு 2004–ஆம் ஆண்டில் 9,000/– ரூபாயாக குறைத்தது. ஆனால், இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 49,850 வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக இந்தத் தொகை 9,000/– ரூபாயிலிருந்து 12,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மாநில அரசு கூடுதலாக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தி உள்ளார் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதனால் மாநில அரசிற்கு ஆண்டிற்கு 47 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

8. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கணினி, பிரிண்டர் மற்றும் Broadband Internet Connection ஆகியவற்றை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வாங்கிக் கொள்ளலாம்.

## சிறந்த ஊராட்சிகளுக்கான விருது

**9.** சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினை கௌரவிக்கும் வகையில் **உத்தமர் காந்தி ஊராட்சி விருது** வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலாக 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## ஊரக உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

**10.** ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பேருந்துகள் செல்லும் 1543 கிலோ மீட்டர் நீளம் உள்ள 889 சாலைகள் நபார்டு வங்கி உதவியுடன் 107 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு

**11.** 2002–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற புகார்கள் காரணமாக, தற்போதுள்ள பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் மறு ஆய்வுக்காக அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஆட்சேபணைகள் இருப்பின் மறு ஆய்வு செய்து, இறுதிப் பட்டியல் மீண்டும் கிராம ஊராட்சிகளில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். அத்துடன் இறுதிப் பட்டியல் இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

**நகரப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

**12.** ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக் களுக்குச் சுழல் நிதியாக ரூபாய் **10,000/–** பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப் படுகிறது. இதுபோன்று நகரப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற சுய உதவிக் குழுக் களுக்கும் சுழல் நிதி தலா **10,000/–** ரூபாய் மானியமாக இந்த ஆண்டு மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப் படும். இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் படுகிறது.

**மகளிர் சுய உதவிக்குழுக்களை ஊக்குவிக்க விருதுகள்**

**13.** சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக **மணிமேகலை விருது** வழங்கப்படும். இதற்காக 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பிணைவைப்புத் தொகை விலக்கு**

**14.** மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசு ஒப்பந்தப் புள்ளிகளில் போட்டியிட ஏதுவாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பது போல் சுய உதவிக் குழுக்களுக்கும் பிணை வைப்புத் தொகை கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப் பரிசீலிக்கப்படும்.

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

**15.** ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுவான மக்கள் அமைப்புகளாக உருவாக்குவது இந்த அரசின் மிக முக்கியமான குறிக்கோளாகும். இதற்கு ஏதுவாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டு 4000 கூட்டமைப்புகளுக்குத் தொடக்க நிதியாக 10000 ரூபாய் வீதம் வழங்கப்படும். மேலும், இக் கூட்டமைப்பு களுக்குக் கூடுதலாக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்படும்.

## உலக வங்கி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம்

**16.** ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். **வாழ்ந்து காட்டுவோம்** என்ற பெயரில் இத்திட்டம் 15 மாவட்டங்களிலுள்ள, 70 ஒன்றியங்களில், 2432 கிராம ஊராட்சிகளில், 717 கோடி ரூபாய் செலவில், 6 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

## சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விற்பனை மற்றும் கண்காட்சி மையம்

**17.** தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சுய உதவிக் குழுப் பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி மையம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிறுவப்படும்.

**சுனாமி வாழ்வாதார மேம்பாட்டிற்கு பொருளாதார உதவிகள்**

**18.** சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்மூலம்,

- வங்கிக் கடன் பெற சிரமப்படும் உடல் ஊனமுற்றோருக்கு, பொருளாதார மேம்பாட்டிற்காக 10,000 ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கிட இத்திட்டத்தில் 30,000 ரூபாய் மான்யமாகவும், 15,000 ரூபாய் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.
- பொருளாதார கடனுதவிக்கு 4% வட்டி மான்யமாக வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவிக்காக 133 கோடி ரூபாயும், திறன் வளர் பயிற்சிக்காக 19 கோடி ரூபாயும், பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிக் கூடிய உள் கட்டமைப்பு வசதிகளுக்காக 38 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

**ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த பணியாளர்கள் நலன்**

முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், ஊரக வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு எந்த வித நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அலுவலர் போராட்டத்தின் போது இத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆட்குறைப்பு, காலிப் பணியிடம் நிரப்பப்படாத நிலை காரணமாக இத்துறையின் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தத் துறை பணியாளர்களின் சிரமங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளின் தொடக்கமாக கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**19.** தற்போது தகுதியுள்ள ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு 10 சதவீதம் ஒதுக்கீடு உள்ளது. இதை 20 சதவீதமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**20.** கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், தற்பொழுது பெறும் தொகுப்பூதியத்திற்கு பதிலாக 1.9.2006–லிருந்து, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள். முழு நேர ஊராட்சி உதவியாளர்களின் காலமுறை ஊதியம் ரூ.1,300–20–1500–25–2000 என்றும், பகதி நேர ஊராட்சி எழுத்தர் களின் காலமுறை ஊதியம் ரூபாய் 625–10–725–20–925 என்றும் மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும். இதனால் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள உதவியாளர்கள்/பகுதி நேர எழுத்தர்கள் பயன் பெறுவார்கள்.

**21.** அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் சிறப்பு சேமநல நிதி ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**22.** துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற தற்போதுள்ள விதிமுறைகளை தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கலாம் என உத்திரவிட அரசு பரிசீலித்து வருகிறது.

**23.** ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் 4.5.2000 முதல் 15.5.2000 வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலம் இது வரை பணிக்காலமாக வரன்முறை செய்யப்படவில்லை. இந்தப் போராட்டக் காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்ய அரசு தற்போது முடிவு செய்துள்ளது.